1973 நவம்பர் 24]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கிற சாலை அதிலே சேர்க்கப்படவில்லை. மாதர் பாக்கத்திலிருந்து சாணுப்புத்தூர் வரை 4 கிலோமீட்டர்தான் இதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. மீதி இணைக்கப்படவில்லை.

*** 383 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஓபசமுத்திரம் கிராமம் 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருப்பதால், இக்கிராமத்தை தார்ச் சாலையுடன் இணைக்கும் கிராமப்புறச் சாலைத் திட்டம் மேலும் காலதாமதப்படுவது ஏன்?

(இ) இது எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) சிறப்பு கிராமப் புறச் சாலைத் திட்டத்தின் கீழ் 1,500-க்கு குறையாமல் மக்கட் தொகையுள்ள கிராமங்களுக்கு தார்ச்சாலையுடன் இணைக்கும் சாலை வேலைகள் மேற்கொள்ளப்படும். 1971 மக்கட்தொகை கணக்கின்படி ஓபசமுத்திரம் கிராமத்தின் மக்கட்தொகை 605. ஆகவே இத்திட்டத்தின்கீழ் இந்தக் கிராமத்திற்கு சாலை வசதி செய்ய இயலாது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அந்தக் கிராமத் தையும், அரிசனக் காலனியையும் சேர்த்து 1,500 மக்கள் தொகை இருக்கிற காரணத்தினுல், அதுவும் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, அதைத்தான் முதலிலே சொன்னேன். 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அங்கு மக்கள் தொகை 605. அந்த ஓபசமுத்திரம் கிராமத்தில் மக்கட்தொகை 125 தான். அதில் காரக்கோட்டுக்குப்பம், முன்சிங் நகரமும் அடங்கியிருக்கிறது. அந்த மூன்றையும் இணைத்துத்தான் 605 என்று சொன்னேன்.